விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு - மிளகாய் வற்றல்

மிளகாய் இந்தியாவில் ஒரு முக்கிய பயிராகும். இது சமையல், மிளகாய்த் தூள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்திய மிளகாய்கள் அவற்றின் தனித்துவமான நிறம் மற்றும் காரத்தன்மைக்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் பெரிதும் மதிக்கப்படுகின்றன.

2025-26 ஆம் ஆண்டுக்கான தோட்டக்கலைப் பயிர்களின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, இந்தியாவில் சிவப்பு மிளகாய் சாகுபடிப் பரப்பு 7.34 லட்சம் ஹெக்டேராகவும், உற்பத்தி 21.32 லட்சம் டன்னாகவும் இருந்தது. ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, மத்தியப் பிரதேசம், கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகியவை இந்தியாவில் சிவப்பு மிளகாய் உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இவை நாட்டின் மொத்த உற்பத்தியில் சுமார் 85% பங்களிக்கின்றன.

தமிழ்நாட்டில் சிவப்பு மிளகாய் பரவலாகப் பயிரிடப்பட்டுப் பயன்படுத்தப் பட்டு வருகிறது. இங்கு 0.38 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், 0.27 லட்சம் டன் உற்பத்தி செய்யப் பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது. தமிழகத்தின் உற்பத்தியில் தூத்துக்குடி, இராமநாதபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் போன்ற மாவட்டங்கள் முக்கியப் பங்களிக்கின்றன. உள்நாட்டு உற்பத்தியைத் தவிர, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானாவிலிருந்து வரும் மிளகாய் வரத்தை தமிழ்நாடு சார்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மிளகாய் வற்றல் கேரள சந்தைகளுக்குச் செல்கிறது.

தமிழ்நாட்டின் சம்பா சிவப்பு மிளகாய், அதன் அடர் சிவப்பு நிறம், கடுமையான காரம் மற்றும் மெல்லிய தோல் ஆகியவற்றிற்காக அறியப்படுகிறது. மிளகாயின் சந்தை விலைகள், பருவகால வரத்து, உற்பத்தி அளவுகள், வானிலை நிலவரங்கள், தரப் பண்புகள், சேமிப்பு மற்றும் கையிருப்பு ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றன.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையத்தின் வேளாண் பொருளியல் துறையின் கீழ் இயங்கும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, விருதுநகர் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய மிளகாய் விலை குறித்த தரவுகளை ஆய்வு செய்து, சந்தைக் கணக்கெடுப்பையும் நடத்தியது. அறுவடை நேரத்தில் நல்ல தரமான சிவப்பு மிளகாயின் விலை ஒரு கிலோவிற்கு சுமார் ரூ.180 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வரத்து மற்றும் பருவமழையைப் பொறுத்து விலைகள் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டவை. எனவே, விவசாயிகள் இதற்கேற்ப தங்கள் விதைப்பு முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு
வேளாண் பொருளியல் துறை
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641003
தொலைபேசி: 0422-2431405
மின்னஞ்சல்: tndemic@gmail.com